# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா: 5-00

முரசு 06 ஒலி 195 ஆங்கீரச வைகாசி 27 (09 . 06 . 1992) செவ்வாய்


## இரண்டு மாதத்தினுள் தீர்வு: பிரதமர் கூறவில்லையாம்

இரண்டு மாத காலத்துக்குள் வடக்கு - கிழக்கிலிருந்து தீவிரவாதம் அழித்தொழிக்கப்படும் என்று பிரதமர் டி. பி. விஜேதுங்க கூறியதாக வெளிவந்த செய்தி தவறானதென பிரதமர் அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பொன்றில் கூறப்பட்டுள்ளது. கண்டியில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் "வடக்கு - கிழக்கில் தீவிரவாதத்தை படிப்படியாக ஒழித்துக்கட்ட முயற்சி எடுத்து வருவதால் எல்லோரும் ஒத்துழைத்து ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும்" என்றே கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குமிழமுனை நோக்கிய படையினரின் முயற்சி புலிகளின் கடும் தாக்குதலால் முறியடிப்பு!

மணலாறில் அலம்பில் பகுதியிலிருந்து மேற்காக குமிழமுனை நோக்கிய படையினரின் பாரிய முன்னேற்ற முயற்சி புலிகளின் தீவிர தாக்குதலால் முறியடிக்கப்பட்டுள்ளது.

படையினர் ரி-55 டாங்கிகள் சகிதம் முன்னேற முற்பட்டனர். படையினருக்கு உதவியாக 2 பொம்பர்கள், 2 ஹெலிகள், 2 அவ்ரோக்கள் கடும் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

நேற்று காலை 9 மணியளவில் குமிழமுனை நோக்கி முன்னேறிய படையினரை புலிகள் தனிக்கபுரம் பகுதியில் வழிமறித்து கடும் தாக்குதலை தொடுத்தனர். மாலை 4 மணிவரை நீடித்த உக்கிர மோதலில் படையினரின் பவள் கவசவாகனம் ஒன்று சேதமாக்கப்பட்டது. படையினர் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டது.

புலிகளின் இத்தாக்குதலை

—04 ஆம் பக்கம் பார்க்க

## விடுதலைப்புலிகள் தடை சிறிலங்காவில் வரவேற்பில்லை

இந்திய விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்தது தொடர்பாக சிறிலங்காவில நடைபெற்ற விவாதங்கள் எதுவித அக்கறையையும் எழுப்பாமலே முடிவுற்றன திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவைத் தவிர வேறு எவரும் தடையை வரவேற்கவில்லை இவ்வாறு பிரபல இந்திய அரசியல் விமர்சகர் ஒ

— 04ஆம் பக்கம் பார்க்க

# இனப்பிரச்சினைதீர்வுஅம்சங்களை அரசே தெளிவு படுத்த வேண்டும்

## ஜனாதிபதியிடம் வற்புறுத்த தமிழ் - முஸ்லிம் குழுக்கள் திட்டம்

இம் மாதம் பதினைந்தாம் திகதி தமிழ் - முஸ்லிம் குழுக்கள் ஜனாதிபதியைச் சந்திக்கும் போது தமிழ் மக்களின் எந்தெந்த குறைபாடுகள் நீக்கப்படவேண்டுமென்பது பற்றி அரசாங்கம் தெளிவு படுத்தவேண்டுமெனக் கோருவர் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

"அரசாங்கம் அநேகமான இன பிரச்சினைகளை தீர்த்து வைத்துள்ளது மொழிப் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது தொழில்கள் முற்றிலும் தகுதி அடிப்படையிலேயே வழங்கப்படுகின்றன" என ஜனாதிபதி பிரேமதாச பேசியுள்ளதால் அப்படியாயின் தீர்க்கப்பட வேண்டிய ஏனைய இனப்பிரச்சினை அம்சங்கள் பற்றி அரசாங்கமே தெளிவு படுத்த வேண்டும் என கோரப்படும்

ஐ கிய தேசியக் கட்சி எந்த வித ஆலோசனைகளையும் சமர்ப்பிக்காத நிலையில் இக்கோரிக்கை முக்கியமானது எனக் கருதப்படுகிறது

எதிர்க்கட்சிகளுடன் இணக்கமான போக்கை அரசு கடைப்பிடிக்கவேண்டுமெனவும் இக்குழு கோரும் அரசு

- 04ஆம் பக்கம் பார்க்க

## ● பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர்

# இராணுவதீர்வுசாத்தியமில்லை அரசு - புலிகள் பேசவேண்டும்

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவ முறையினால் தீர்வு காண முடியாது சமாதானத் தீர்வுகாண அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற வேண்டும் என சிறிலங்காவிலுள்ள பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் ஜோன்பீல்ட் கொழும்பு ஆங்கிலபத்திரிகையொன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்

பாராளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பொருத்தமான மன்றமாகும். ஆனால் இன்றைய அரசியல் சூழ்நிலை குறித்த தீர்வை தாமதப்படுத்துகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்

முன்னேற்றமான சாதனங்களை உருவாக்கக் கூடியவாறு செயற்பட தெரிவுக்குழு ஊக்கமளிக்கப்படவேண்டும் எனவும். இந்த நீண்டகாலப் பிரச்சினைக்கு தீர்வு காண இது உயர்வான சந்தர்ப்பம் என்றும் இவர் மேலும் தெரிவித்தார்.

# தெரிவுக்குழுவில் மீண்டும் சுதந்திரக்கட்சி இணையும் - அனுரா அறிவிப்பு

இனப்பிரச்சினைத் தீர்வுக்கென நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி மீண்டும் சேர்ந்து கொள்ளும் என அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்க கூறினார்

கண்டி டீ. எஸ். சேனநாயக்க மண்டபத்தில கட்சித்தொண்டர்கள் மத்தியில் கடந்தசனிக்கிழமை பேசும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

சென்ற வாரம் கட்சித்தலைவர்கள் சந்திப்பில எதிர்க்கட்சியினர்க்கும் அரசாங்கத்தரப்பினர்க்குமிடையே ஏற்பட்ட சுமுகமான நெருக்க உறவுகளை அடுத்தே இந்த முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது

சுதந்திரக்கட்சிச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்க கடந்த வியாழக்கிழமை தெரிவித்த கருத்தை உறுதிப்படுத்துவதாக அனுராபண்டாரநாயக்கவின் அறிவிப்பு அமைந்துள்ளது

தெரிவுக்குழு செயற்படுவதாக விருந்தாலும் ஹஜ் பாதி

...04ஆம் பக்கம் பார்க்க

## கடற்படை உயர்பதவிகளில் மாற்றம் ஏற்படும்

கடற்படையின் கட்டளைக் கட்டமைப்பில் பாரிய மாற்றங்கள் ஏற்படவுள்ளன. அடுத்த அக்டோபர் மாதத்தில் கடற்படையின் றெயர் அட்மிறல் எவ் எஸ். கியூ விக்ரமரத்ன கட்டாய ஓய்வு பெறும் 55 வயதை அடைவதால சேவையிலிருந்து இளைப்பாறுகிறார்.

கிழக்கத்திய கடற்படைத் தளபதி கொமடோர் சமரசேகர அடுத்த சிரேஷ்ட அதிகாரி என்ற வகையில றெயர் அட்மிறல் விக்ரமரத்னவின் இடத்துக்கு பதவியுயர்த்தப் படுவார்,

## ஜனாதிபதி கொலை முயற்சி வலுவான ஆதாரமில்லை

மதவாச்சியில் வைத்து ஜனாதிபதி பிரேமதாசவைக் கொலைசெய்ய சிறிலங்கா மக்கள்கட்சியை சேர்ந்த மாகாணசபை உறுப்பினர் சதி செய்தார் என்ற குற்றச்சாட்டு வலுவானதல்ல எனக் கருதப்படுகிறதாம்

கொலை செய்யவென ஏற்பாடு செய்யப்பட்ட ஆசிரியருக்கும் இந்த மாகாணசபை உறுப்பினருக்கும் நீண்ட நாட்கள் தொடர்பிருக்கவில்லை, கொலை முயற்சிக்கு பாவிக்க வழங்கப்பட்டதாகக் கூறப்

... 04 ஆம் பக்கம் பார்க்க

## சி. ம. கட்சி அதிருப்தியாளர்கள் ஐ. தே. கவில் சேரலாம்

சிறிலங்கா மக்கள் கட்சிச் செயலாளர் வை பி டி சில்வா ஒஸி அபேகுணசேகர உட்பட அதிருப்தியாளரை கட்சியிலிருந்து நீக்கியுள்ளதாக கடிதம் அனுப்பியுள்ளார், இத்தீர்மானம் கட்சியின் மத்திய குழுவால் எடுக்கப்பட்டுள்ளது.

முன்பு ஒஸி அபேகுணசேகர கட்சியிலிருந்து நீக்கப்பட்ட போது அதை எதிர்த்து அவர் வழக்குத்தாக்கல் செய்தார். நீதிமன்றம் அவரை நீக்கியது சட்ட விரோதம் எனத் தீர்ப்பளித்ததால் அவர் மீண்டும்

... 04ஆம் பக்கம் பார்க்க

## ★ மண்டைதீவு கடலில் இரு மீனவர்களை காணவில்லை இருவருக்கு படுகாயம்

நேற்றுமுன்தினம் மண்டைதீவு - கடையடி பகுதியில் கடற்படையினர் நடத்திய தாக்குதலில் இரு மீன்பிடிப் படகுகள் சேதமடைந்துள்ளன

குருநகரைச் சேர்ந்த ஐயாத்துரை இன்னவன் (21), மண்டைதீவில் இருந்து இடம்பெயர்ந்து பாஷையூரில் தங்கியுள்ள மரியாம்பிள்ளை மரியநாயகம் (41) ஆகிய இரு மீனவர்களும் இன்னமும் கரைசேரவில்லை

— 04ஆம் பக்கம் பார்க்க

★ சுதந்திரக்கட்சி சார்பில்

# அடுத்தஜனாதிபதிதேர்தலில் வேட்பாளர் ஸ்ரீமாவோவே!

"எனது தாயார் சுதந்திரக் கட்சியின் தலைவியாக இருக்கும்வரை ஒரு பிரச்சினையும் இல்லை கட்சி விரும்பும் வரை அவர் விரும்பும் வரை தொடர்ந்து தலைவியாக இருக்கலாம் தலைமைப் பதவிக்கு சண்டை இல்லை ஏனெனில் அவர் 32 வருடங்களாகத் தலைமைப்பதவியில் இருந்தவர் போட்டியில்லாத தலைவர் என்னிடமிருந்தோ அல்லது கட்சியில் வேறு எவரிடமிருந்தோ எனக்குத்தெரிந்த அளவில் அவருக்கும் போட்டியில்லை அவர் ஆரோக்கியமாக இருப்பின் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அவரே வேட்பாளர்."

இவ்வாறு அனுரா பண்டாரநாயக்கா சண்டே ஐலண்ட் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த போது;

"அவர் இளைப்பாறும் போது, தலைமைப் பதவி காலியாகும் அப்போது நான் தலைமைப் பதவிக்கு எனது பெயரைச் சமர்ப்பிப்பேன். யாரும் போட்டியிடலாம் நான் வெல்லுவேன் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும் யார் கட்சிக்கு உழைத்தவர்கள் என்பதும் கட்சிக்குத் தெரியும் இதன் அடிப்படையில் தான் நான் போட்டியிடுவேன் நான் ஒரு ஜனநாயக வாதி ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்துள்ளேன்" எனக் கூறினார்.

"எனக்கும் சந்திரிகாவுக்குமிடையில் எவ்வித பிரச்சினையும் இல்லை என்னைப் பொறுத்த அளவில் கட்சித் தலைமைக்கும் போட்டியில்லை" என மேலும் கூறினார்.

## வழக்கை இடம்மாற்ற கோரிக்கை

தமக்கெதிராக நுவரெலிய நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை கொழும்புக்கு மாற்றும் படி மத்திய வங்கி ஆளுஞர் எச். என். எஸ். கருணாதிலக சட்டமா அதிபரைக் கோரியுள்ளார்.

தமது ஆதனத்துக்குள் அத்துமீறிப் பிரவேசித்ததாக பிரபல பொருளாதார நிபுணரும் வங்கியாளருமான ஜே. ஆர். ஜயவர்த்தனவின் மகள் திருமதி நீலியா பெரேரா மத்திய வங்கி ஆளுநருக்கு எதிராக இவ்வழக்கைத் தாக்கல் செய்திருக்கிறார்.

● அனுரா பண்டார நாயக்கா பேட்டி

# இனப்பிரச்சினை விடயத்தில் அரசு மனம் குழம்பியுள்ளது

"இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முற்படுகின்ற பாராளுமன்ற தெரிவுக்குழுவைச் சிதைக்கும் நோக்கம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு இல்லை."

இவ்வாறு அனுரா பண்டாரநாயக்கா சண்டே ஐலண்ட் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார். அப் பேட்டியின் சில பகுதிகள் கீழே தரப்படுகின்றன.

கே: கட்சி அரசியலுக்கு அப்பால் சென்று தேசியப் பிரச்சினைக்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுத்து பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்குத் திரும்பவேண்டும் என தமிழ் கட்சிகள் உங்களை வற்புறுத்தியுள்ளன. நீங்கள் பகிஷ்கரிப்பைத் தொடர்ந்தால் தமிழ் மக்களின் வாக்குகளை இழக்க நேரிடும் அல்லவா?

ப: இல்லை. இது தமிழர்கள் வாக்குகள் சம்பந்தமான விடயம் அல்ல. ஐ.தே.கட்சி 15 வருடங்களாக ஆட்சியில் இருந்துள்ளது. இன்றுவரை இனப்பிரச்சினைக்கான எவ்வித தீர்வையும் முன்வைக்கவில்லை. தெரிவுக் குழுவைப் பிரேரித்தது சுதந்திரக்கட்சி தான். அதனாலேதான் சுதந்திரக்கட்சி எம்.பியான மங்கள முனசிங்கா அதன் தலைவராக இருக்கிறார். அது முதலாவது அம்சம். அடுத்ததாக, ஜனாதிபதியும் பிரதமமந்திரியும் விடுத்த அறிக்கையை பாருங்கள். 'நாங்கள் ஒரு உடன்பாட்டுக்கு வந்து சமரசம் காண்போம். அதற்கான முழுப் பாராட்டையும் நாங்கள் எடுக்கமாட்டோம்' என ஜனாதிபதி கூறுகிறார்.

ஆனால் பிரதமமந்திரி விடுதலைப்புலிகளை ஒழித்துக் கட்டுவோம் என்று சொல்லுகிறார். எதிர்க்கட்சி ஒத்துழைக்காவிடிலும் ஒழித்துக் கட்டுவதாக கூறுகிறார். பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர் முட்டாள்த்தனமாகப் பேசுவதாகக் கூறுகிறார். [illegible] பண்டாரவேவா, ஏ.ஜே.ரணசிங்காவோ இதைச் சொன்னால் ஒருவரும் பாரதூரமாக எடுக்கமாட்டார்கள். ஆனால் இந்த மனிதரோ நாட்டின் பிரதமரும், பாதுகாப்பு துணை அமைச்சரும் ஆவார்.

இரண்டு மாத முடிவில் அதாவது ஆவணி முற்பகுதியில் விடுதலைப்புலிகளின் தொந்தரவு இருப்பின் விஜேதுங்க உடன் இராஜினாமா செய்ய வேண்டும்.

ஜனாதிபதியும், பிரதமரும் இரு வெவ்வேறு முரண்பாடான நிலைப்பாடுகளை எடுத்துள்ளனர். இனப்பிரச்சினையில் ஐக்கிய தேசியக் கட்சி ஒத்த கருத்துடன் பேச முடியவில்லை.

அவர்கள் முற்று முழுதாக மனம் குழம்பியிருக்கிறார்கள். ஜனாதிபதி ஒன்று சொல்கிறார். பிரதமர் வேறொன்று சொல்கிறார். அரசாங்கத்தில் அவர்கள் தான் முதலாவதும், இரண்டாவதும் முக்கிய எதிர்க்கட்சி என்ற வகையில் நாங்கள் தான் தெரிவுக் குழுவின் தலைவர். அரசு இதில் என்ன நிலைப்பாட்டினை எடுக்கிறதென்பதைப் பார்ப்போம்.

தெரிவுக்குழுவுக்கு மீண்டும் வரும்படி தமிழ் கட்சிகள் கோரியதை நாங்கள் வரவேற்கிறோம். அவர்களுடைய கோரிக்கையை நாங்கள் நிராகரிக்கவில்லை அது பரிசீலனையில் உள்ளது நாங்கள் திரும்பிப்போவதை ஒத்திப் போட்டுள்ளோம், ஏனெனில் அரசோடு பாரதூரமான பிரச்சினைகள் எங்களுக்கு உள்ளன எங்களது ஆறு எம்.பிக்களை உரிமைக்குழுவிற்கு கொண்டு வருகிறார்கள். (PRIVILEGES COMMIT-TEE) நாங்கள் கேள்விப்பட்ட அளவில் சிலர் சிறைக்கும் செல்லக் கூடும். அதை நிறைவேற்ற உறுதியாக இருக்கிறார்கள், ஆகவே அரசு இப்படியான, விரோதமான, மூர்க்கமான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் எதிர்க்கட்சிகள் எப்படி அந்தரங்க புத்தியுடன் கடமையாற்றும் என எதிர்பார்க்க முடியும்?

தெரிவுக்குழு சீர்குலைய விடமாட்டோம். ஏனெனில் அது எங்களிடம் இருந்து வந்த ஆலோசனை. ஆனால் நாங்கள் மீண்டும் தெரிவுக்குழுவுக்கு போவது அரசின் பிரதிபலிப்பில் தங்கியுள்ளது நாங்கள் இரு நம்பிக்கை இல்லாத் தீர்மானங்கள் சமர்ப்பித்துள்ளோம் ஒன்று சபாநாயகருக்கெதிராக, மற்றது அரசுக்கெதிராக இன்னும் அவர்கள் திகதி தரவில்லை ஆகவே சரியான சமயத்தில் தெரிவுக்குழுவுக்கும் போக நாங்கள் தீர்மானி போம் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளுடன் அரசு உள்ளார்த்தமாக நடந்து கொள்ளல் வேண்டும் என நெருக்குதல் கொடுப்பது எனத் தமிழ்க் கட்சிகள் தீர்மானித்துள்ளதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கே: தெரிவுக்குழுவின் பேச்சுவார்த்தைகள் எந்த நிலையில் உள்ளன? மிகுதியான தடைகள் எவை?

ப: எல்லாக் கட்சிகளும் தங்கள் சாட்சியங்களை அளித்துள்ளன, இரண்டு விடயங்களை இப்போது நாங்கள் ஆராய்கிறோம் வடகிழக்கு இணைப்பு மற்றது அதிகாரப் பரவலாக்கம். இந்த இரண்டு விடயங்களும் சச்சரவுக்குள்ளானவை. ஏனெனில் எல்லாக் கட்சிகளுமே இவ்விரு விடயங்களிலும் கடுமையான போக்கைக் கொண்டுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சி முதல் முறையாக இணைப்புக்கு எதிராகக் கருத்துவெளியிட்டுள்ளது இவ்விடயத்தில் தெளிவற்ற நிலையில் எல்லோரும் இருந்துள்ளார்கள், ஆகவே இதுதான் ஒரு முட்டுக்கட்டை இதற்கு நாம் ஒரு வழிகாண வேண்டும்.

கே: இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதற்கு எதிர்க்கட்சி உதவினால் அதனால் வரும் நற்பெயரை எதிர்க்கட்சிக்கே தருவதென ஜனாதிபதியின் கூற்று பற்றி தங்கள் கருத்து என்ன?

ப: யார் இதைப் பெரிதாக எடுக்கிறார்கள்? அவருடைய வாக்குறுதியைப் பற்றி நாங்கள் அக்கறை கொள்ளவில்லை அதனாலே தான் தெரிவுக்குழுவைச் செயற்பட வைத்தோம்.

# வெள்ளப் பெருக்குக்கு தவறான நகரத் திட்டமிடலே காரணம்

கடந்த வியாழக்கிழமை பெய்த பெருமழையால் ஏற்பட்ட வெள்ளத்திற்கு அரசாங்கத்தின் தவறான நகரத் திட்டமிடலே காரணமென நகரவாசிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அரசாங்கத்துக்கு ஆதரவான தனிநபர்களும் கம்பனிகளும் அதிக லாபமீட்டும் நோக்குடன் தாழ் நிலப் பகுதிகளை நிரப்ப அனுமதிக்கப்பட்டதனால் வழமையான வடிகாலமைப்பு பாதிக்கப்பட்டுள்ளதெனச் சிலர் குற்றஞ்சாட்டினர்.

'நாவலத் திறந்தவெளிப் பல்கலைக் கழகம் அமைப்பதற்காக சதுப்பு நிலத்தை நிரப்பியது ஒரு பாரியகாரணம் என்று ஓர் உள்ளூர் அரசியல்வாதி தெரிவித்தார்.

இதேவேளை நகரத் திட்டமிடல் மற்றும் வீடமைப்புக்கு பொறுப்பான அமைச்சர் சிறிசேன கூரேயும் வெள்ளத்தில் ஆழ்ந்து விட்ட அவரது நாஇகிரிய இல்லத்திலிருந்து கடற்படை வள்ளத்தின் மூலம் வெளிக்கொண்டு வரப்பட்டார்.

அதேபோல உணவு அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி, மேல் மாகாண முதலமைச்சர் சுசில் முனசிங்க ஆகியோரது இல்லங்களும் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டன.

# புலிகள் ஆதரவாளர்களை கட்டுப்படுத்தவே இந்தத் தடை

- தமிழக சட்ட அமைச்சர்

'இந்தியாவில் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களைக் கட்டுப்படுத்தும் முகமாகவே இந்திய மத்திய அரசு புலிகள் இயக்கத்தை தடை செய்துள்ளது'

தமிழக சட்டத்துறை அமைச்சர் கிருஷ்ணசாமி சென்னையில் கடந்த வெள்ளிக்கிழமை கட்ட மொன்றில் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

புலிகளுக்கு சார்பாக தமிழகத்தில் தலைமறைவாக இயங்கும் அமைப்புகளை மூற்றாக்களைய தமிழக அரசு நடவடிக்கையெடுத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கருத்தரங்கு

யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ மாணவர் மன்றம் நாளை புதன் கிழமை பி.ப3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் '1980க்குப் பின் வங்கித் தொழிலில் ஏற்பட்ட மாற்றங்கள்' என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கு ஒன்றினை நடாத்த உள்ளது.

## விசாரணை அறிக்கை

ராஜீவ் காந்தி கொலை சம்பவத்தில் பாதுகாப்பு குறைபாட்டை விசாரணை செய்துவந்த வர்மா கமிஷனின் அறிக்கை எதிர் வரும் 15 ஆம் திகதி அமைச்சரவையிடம் கையளிக்கப்படவுள்ளது.

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு:
21. 06. 1964

அரக்கர் அழிப்பு:
14. 05. 1989

திதி:
09. 06. 1992



**அமரர் மயில்வாகனம் - ஸ்ரீகுமார்**
(மாசிலாக)

பாணர் புகழும் - வீரம் போற்றியேசல் தன்னை- பல வீணர் சூழ்ந்தும் மாய்த்த வஞ்சம் மறக்குமோ!

மயிலிட்டி
வல்வெட்டித்துறை.

பிரிவால் வாடும்
பிள்ளைகள், பெற்றோர்கள்,
சகோதரர்கள், உறவினர்கள்.

06022

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

**சின்னப்பா பரமேஸ்வரி**

எங்கள் குடும்பத்தின் மாசற்ற ஜோதியே, மங்காத ஒளிவிளக்கே, பாசசுடரே, தர்மத்தின் தலைவியே, உங்கள் உயிர் இவ்வுலகை விட்டு பிரிந்தாலும் என்றும் அணையாத அமரஜோதியாக ஒளிரும். தாயே, 31 நாட்கள் என்ன 31 வருடம் சென்றாலும் உங்கள் அன்பு நினைவு என்றும் மாறாது.

அன்னாரின் இறுதிக் கிரியையில் கலந்து சகல விதத்திலும் உதவிபுரிந்து எமக்கு ஆறுதல் அளித்த அனைவருக்கும் நன்றிகள்.

பிரிவால் துயருறும்
கணவன், தாய் பிள்ளைகள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

V. H லேன்
இருபாலை,
கோப்பாய்.

06023

★ நேற்று முன்தினம் இரவு குடாக்கடலில்

# கடற்படை அட்டகாசம்; மீனவர் படகு மூழ்கடிப்பு!

யாழ். குடாக்கடலில் நேற்று முன்தினம் இரவு மீன் பிடித்துக்கொண்டிருந்த குருநகர் மீனவர்கள் மீது கடற்படையினர் கலிபர், மற்றும் துப்பாக்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

குருநகர் மீனவர் சென்ற படகு ஒன்று கடற்படையினரின் தாக்குதலினால் மூழ்கடிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இதில் மீன்பிடிக்கச் சென்ற இரு மீனவர்கள் கடலில் பாய்ந்து நீந்திக்கரை சேர்ந்ததாகவும் ஒரு மீனவரைக் காணவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மீனவர்கள் சென்ற இன்னுமொரு படகைக் கடற்படையினர் மீனவர்களுடன் பிடித்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. நேற்று முன்தினம் இரவு கடற்படை விரைவுப் படகுகள் கரைமுனையை அண்டிய பகுதியில் காணப்பட்டதனால் பல மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லவில்லை. நேற்று முன்தினம் நள்ளிரவு மீன்பிடித்துக் கொண்டு நின்ற சில மீனவர்கள் மீது பீரங்கிப் படகில் இருந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (15)

★ சாடுகிறார் கருணாநிதி

## மலிவுவிலை மதுவுக்குத் தடை; ஆனால் பார்களுக்கோ அனுமதி!

தமிழக அரசு மலிவு விலை மதுவை அகற்றிவிட்டதாகக் கூறிக்கொண்டு பார்களுடன் கூடிய மதுக்கடைகளைத் திறப்பதன் மூலம் அ.தி.மு.க தனது தேர்தல் வாக்குறுதியை உதாசீனப்படுத்தி விட்டதாக தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன் விவசாயிகளின் நீரிறைக்கும் இயந்திரங்களுக்கு வழங்கப்பட்டிருந்த இலவச மின் விநியோகத் திட்டத்தை தமிழக அரசு இரத்துச் செய்துள்ளதையும் கருணாநிதி கண்டித்துள்ளார்.

## பிராந்திய தலைவர்களைப்பற்றிய தகவல்களுக்கு சன்மானமாம்

விடுதலைப் புலிகளின் பிராந்தியத் தலைவர்கள் என அரசு கருதுவோரைப் பற்றி தகவல்கள் கொடுப்போருக்கு சன்மானம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பிராந்தியத் தலைவர்களென படையினர் கருதும் 12 பேரின் புகைப்படங்கள் அடங்கிய வண்ண சுவரொட்டிகள் மட்டக்களப்பு நகரில் நேற்று முன்தினம் ஒட்டப்பட்டிருந்தன.

இவர்களைப் பற்றிய தகவல்களைத் தருவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படுமென மட்டக்களப்பு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கரிகாலன், டேவிட், சர்மா, மனோ மாஸ்டர், சில உட்பட 12 பேரின் பெயர்களுடன் கூடிய புகைப்படங்கள் இச்சுவரொட்டிகளில் காணப்படுகின்றன.

### ஜனாதிபதி செயலக அறிவிப்பு

தடுப்புக்காவல் முகாம்களில் இருப்பவர்கள் தாம் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகக் கருதினால் உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்யலாம். கடித மூலம் இவ்விதம் முறையீடு செய்ய அவர்களுக்கு உரிமையுண்டு என ஜனாதிபதி செயலகத்திலிருந்து வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

## 5765 பேர் இலங்கையில் தடுப்புக் காவலில்!

இலங்கையில் தற்பொழுது 5.765 பேர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று இலங்கை மனித உரிமைகள் குழு தெரிவித்துள்ளது.

தென்பகுதியிலுள்ள ஐந்து தடுப்பு முகாம்களிலும், ஒன்பது நலன்புரி நிலையங்களிலும் இவர்கள் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் கணிசமானோர் ஜே.வி.பி இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஏனையோர் வடக்கு கிழக்கு மற்றும் மலையகத் தமிழர்கள் ஆவர். இத்தகவலை ஜனாதிபதி செயலகம் உறுதிப்படுத்தியுள்ளது.

● உடுகம்பொலவின்

## இருப்பிடத்தை அடைந்தும் கைது செய்யவில்லை

பொலிசாருக்குப் புதிது சரித்திரமாக டிமிக்கி கொடுத்துவரும் முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் உடுகம்பொல சிறிலங்காவின் தென்பகுதியில் மறைந்து வாழும் இடத்தைப் பொலிஸார் இனங்கண்டு சென்றடைந்தபோதும், முறையான தடுப்புக்காவல் உத்தரவோ அல்லது நீதிமன்றக் கட்டளையோ இல்லாத காரணத்தால் அவரைக் கைது செய்யவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

அவரைத் தடுப்புக்காவலில் வைக்கவோ அல்லது கைது செய்யவோ தெளிவான குற்றச்சாட்டுக்கள் இன்னும் தயாரிக்கப்படவில்லை.

உடுகம்பொலவை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் பாதுகாப்புத் துறையினரால் வரையப்பட்டுள்ளன.

உடுகம்பொல அவரது சகோதரர்கள் குலசிறி 'பத்மசிறி ஆகியோருடன் மரணமடைந்த இன்னுமொரு சகோதரரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டதைச் சிலர் கண்டுள்ளனர்.

பல வருடங்களுக்குக் கண்டுபிடிக்கப்படாமலே தம்மால் ஒழிந்திருக்க முடியுமென உடுகம்பொல ஏற்கனவே கூறியுள்ளார்.

தமது இரகசிய தங்குமிடத்தில் இஹ ந்த என்ற சிங்களச் சோதிட நூலை உடுகம்பொல வாசித்துக்கொண்டிருக்கும் புகைப்படமொன்றை "சண்டே டைம்ஸ்" பத்திரிகை வெளியிட்டுள்ளது.

## வெள்ளம் வடிகிறது; சபை அமர்வு இன்று நடைபெறும்!

பாராளுமன்ற அமர்வு இன்று திட்டமிட்டபடி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பாராளுமன்ற கட்டடத் தொகுதியைச் சுற்றி வெள்ளம் காணப்பட்டதையடுத்து சபை அமர்வுகளை ஒத்திவைக்க முன்னர் ஆலோசிக்கப்பட்டிருந்தது. ஆனால் அப்பகுதியில் வெள்ளம் குறைந்துள்ளதையடுத்தே சபை இன்று திட்டமிட்டவாறு கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### என்ஜின் ஒயில் கைப்பற்றப்பட்டது

இலங்கைக்கு கடத்திவர வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் 1500 லீற்றர் என்ஜின் ஒயில் இராமேஸ்வரத்தின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து கடந்த சனிக்கிழமை இரவு பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

## தங்களுக்கு எதிரான விசாரணையை பகிரங்கமாக நடத்த எதிரிகள் மனு

ராஜீவ் காந்தி கொலை வழக்கை பகிரங்கமாக நடத்துமாறு அவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள எதிரிகள் கோரியுள்ளனர்.

எதிரிகள் சிலரின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் துரைசாமி விசேட நீதிமன்ற நீதிபதி எஸ்.எம்.சித்திக்கிடம் மேற்படி வழக்கு விசாரணையின்போது இது குறித்த மனுவைத் தாக்கல் செய்தார்.

கைக்குழந்தையுடன் ஆஜரான நளினி, குழந்தைக்கும் தனக்கும் செலவுக்குப் பணம் இல்லை எனவும் தன்னிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணத்திலிருந்து செலவுக்கு அதிக தொகை கிடைக்க வழி செய்யுமாறு நீதிபதியிடம் அவரின் காலில் விழுந்து அழுது கோரினார்.

## வடபகுதி அதிபர்களுக்கு விசேட போட்டிப் பரீட்சை

பாடசாலை அதிபர் தரம் ஒன்று, இரண்டுக்கான வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை ஒன்று விசேடமாக வடபகுதிக்கு நடத்தப்படவுள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இப் பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பித்த வடபகுதி ஆசிரியர்களின் கோரிக்கையையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

## வலிகாமத்தில் தொடர்ச்சியாக யுத்தமிடமுடியா நிலையில் படை

வலிகாமம் பகுதியில் தொடர்ச்சியாக யுத்தத்தில் ஈடுபட முடியாத நிலையில் படையினர் இருப்பதாக கூட்டுப்படைத் தலைமையக கேணல் சரத்முனசிங்க தெரிவித்துள்ளார்.

'வடபகுதியில் யுத்தம் நிறுத்தப்படவில்லை வலிகாமம் பகுதியில் படையினருக்கு பரிச்சியமில்லாததால் தொடர்ச்சியாக சண்டையிட அவர்களால் முடியாதிருக்கிறது இரண்டு அல்லது 3 நாள் யுத்தத்தின் பின்னர் படையணிகளை ஒழுங்கமைத்தல், காயமடைந்த சிப்பாய்களை சிகிச்சைக்காக அப்புறப்படுத்தல், உணவு, வெடிபொருள் விநியோகம் ஆகியவற்றை அவதானிப்பதற்காக 2 3 நாட்கள் தாமதிக்க வேண்டி ஏற்படுகிறது' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## புலிகளுக்கு ஆதரவாக திருச்சியில சுவரொட்டிகள்

புலிகளுக்கு விதித்துள்ள தடை உத்தரவை இரத்துச் செய்யக்கோரியும், அத் தடை உத்தரவை பிறப்பித்த மத்திய அரசைக் கண்டித்தும் சிவப்பு எழுத்துக்களால் எழுதப்பட்ட பாரிய சுவரொட்டிகள் திருச்சி நகர் முழுவதும் ஒட்டப்பட்டுள்ளன.

சுமார் நான்கு சதுர அடி பரப்பையுடைய இச்சுவரொட்டிகளில் 'மத்திய மாநில அரசுகளே புலிகளுக்கு விதித்த தடை உத்தரவை இரத்துச் செய்' 'போராளிகளுக்கு அரசியல் புகலிடம் வழங்கிய புரட்சிகர மற்றும் தமிழ் இன ஆதரவு இயக்கங்களை ஒடுக்கவே புலிகளுக்குத் தடை' 'தமிழ் இன ஆதரவாளர்களே ஒரு அணியில் திரளுவீர்' போன்ற வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன.

# வடபகுதி ரயில் பயணிகளிடமிருந்து கத்தி முனையில் கொள்ளை!

கொழும்பு கோட்டையிலிருந்து வவுனியா நோக்கிச் செல்லும் இரவு ரயிலில் தமிழ்ப் பயணிகளிடம் கத்தி முனையில் கொள்ளையடிக்கப்படுவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ரயில் இரவு 11 மணிக்கு கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படுகிறது.

கோட்டையில் ரயிலின் என்ஜினை மாற்றிப் பூட்டும் போது பெட்டிகளில் உள்ள மின் குமிழ்கள் அணைந்துவிடும் இச்சந்தர்ப்பத்திலேயே கத்தி முனையில் பயணிகள் மிரட்டப்பட்டு பணம், நகை என்பன கொள்ளையிடப்படுகிறதாம்.

## கோட்டையில் தமிழரிடம் $1\frac{1}{2}$ இலட்சம் ரூபா கொள்ளை

இரவு ரயிலில் வவுனியா செல்வதற்காக கோட்டை புகையிரத நிலையத்திற்கு வந்த தமிழ்ப் பயணி ஒருவரிடமிருந்து 96,000 ரூபா ரொக்கப்பணத்தையும் 45 000 ரூபாவுக்கு மேல் பெறுமதியான தங்க நகைகளையும் இருவர் தந்திரமாகக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என அறிவிக்கப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை இரவு கோட்டைப் புகையிரத நிலையத்தில் இச்சம்பவம் நடந்துள்ளது.

இவர்கள் இருவரும் தம்மை இரகசியப் பொலிஸார் என அறிமுகப்படுத்திய பின்னர் வழமைபோல் 'விசாரணை, மிரட்டல், கைது' நாடகங்களை நடத்திப் பயணியை செயலிழக்கச்செய்து தந்திரமாக இக் கொள்ளையை நடத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### மலையக ஒன்றியம்

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளித் தமிழ் சமூகத்திலிருந்தும் உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் உள்ள பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி கற்ற பட்டதாரிகளைக் கொண்டும் மலையகப் பட்டதாரிகள் ஒன்றியமொன்று அமைக்கப்படவுள்ளது.

### சி. சண்முகம் காலமானார்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பகுதிநேர அறிவிப்பாளரும், பிரபல நாடக ஆசிரியரும், அறிவிப்பாளர் இராஜேஸ்வரி சண்முகத்தின் கணவரும் கொட்டடியைப் பிறப்பிடமாகக்கொண்டவருமான சி. சண்முகம் நேற்று கொழும்பில் காலமானார்.

## சேருநுவரவில் பஸ்களிலிருந்து பற்றறிகள் அபகரிப்பு!

கிழக்கில் ஏறாவூரிலும், சேருநுவரவிலும் சேவையிலீடுபட்ட பஸ்வண்டிகள் நிறுத்தப்பட்டு அவற்றில் பொருத்தப்பட்டிருந்த பற்றறிகள் ஆயுததாரிகளினால் அபகரிக்கப்பட்டு எடுத்துச்செல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

## காவலிலிருந்த இரு தமிழர் வவுனியாவில் சுட்டுக்கொலை!

வவுனியாவிலுள்ள ஜோசப் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு தமிழர்கள் கடந்த புதன்கிழமை இரவு சுட்டுக் கொலைப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

இவர்கள் அங்கிருந்து தப்பியோட முயன்றபோதே சுட்டுக் கொலைப்பட்டதாக இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தப்பிவந்த குருநகர் மீனவர் தகவல்

# நாம் தொழில் செய்தபோது திடீரென கடற்படை சுட்டது

இரவு 11 மணியளவில் மண்டைதீவு கடல் பகுதியில் நாம் தொழில் செய்துகொண்டிருந்தோம் திடீரென கடற்படை படகு ஒன்று எமது வள்ளத்தை நோக்கி வந்து எம்மீது பரா வெளிச்சம் பாய்ச்சி சுட்டது

இவ்வாறு கடந்த ஞாயிறு இரவு மண்டைதீவு கடற்பகுதியில் கடற்படையினரின் தாக்குதலின்போது மயிரிழையில் தப்பிவந்த அல்போன்ஸ் சந்தியாப்பிள்ளை (21) என்ற குருநகர் மீனவர் முரசொலிக்குத் தெரிவித்தார்.

கடற்படையினர் சுடத் தொடங்கவே நாம் கடலில் பாய்ந்து நீந்திக்கரை சேர்ந்தோம். இதனைப்பத்து கடற்படையினர் எமக்கு அடுத்த பக்கம் தொழில் செய்த பாஷையூர் மீனவர்கள் மீதும் சுட்டனர். அவர்களும் கடலில் குதித்தனர்.

கடற்படையினரின் தாக்குதலினால் மீன்பிடிப் படகு ஒரே புகைமண்டலமாகக் காட்சியளித்தது எனவும் அவர் சொன்னார். (15)

## மாலைதீவு உதவி

தெற்கில் வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதங்களுக்கு மாலைதீவு அரசு 2 லட்சம் ரூபா உதவித்தொகையாக வழங்கியுள்ளது ஸ்ரீலங்காவிற்கு வெள்ள உதவி வழங்கிய முதலாவது நாடு மாலைதீவு என்பது குறிப்பிடத்தக்கது

## தெரிவுக்குழுவில்..

திரை சென்றுள்ள மூஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களான ஹாலிம் இசாக் எம். எச் எம் அஷ்ரப் மற்றும் இராஜாங்க அமைச்சர் அஸ்வர் ஆகியோர் நாடு திரும்பிய பின்பு இம்மாதஇறுதியிலேயே சொற்பமே என எதிர்பார்க்கப்படுகிறது

தெரிவுக்குழு தொடர்பான அனுராபண்டார நாயகாவின் பேட்டி உள்ளே

## இரு –

அல்போன்ஸ் சந்தியாப்பிள்ளை (21), இறோசியன் ஜெயம்மா (23) ஆகிய இருவரும் நீந்திக் கரைசேர்ந்துள்ளனர்

செல்லத்துரை இராசநாயகம் (30), ம. ரமேஸ் (13) ஆகிய இருவர் கடற்படை சூட்டில் காயமடைந்துள்ளனர் (15. 19)

## விடுதலைப் புலிகள்...

திப்நாயர் எழுதிய கட்டுரையொன்றில் தெரிவித்துள்ளார்

சிறிலங்கா இந்தியாவை நம்பிக்கையில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்ட பின் கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவதால விடுதலைப்புலிகள் இயக்கம் தாமாகவே தடைசெய்யப்பட்டு நிற்கிறது ஆகவே தடை எதைச்சாதிக்கப் போகிறது? என முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்த்தன கேள்வி எழுப்பியுள்ளார்

இந்திய அரசியலமைப்பின் 370 வது ஷரத்தின்படி ஜம்மு காஷ்மீருக்கு வழங்கப்பட்ட விசேட அந்தஸ்து போலவடக்குக் கிழக்கு வழங்குவதே பிரச்சினைக்கு தீர்வாக அமையலாம் எனதம்மைஇனங்காட்ட விரும்பாத சிங்களவர் ஒருவர் கூறியுள்ளார்

பிரிக்கப்படாத வடக்கு-கிழக்கு ஐக்கியப்பட்ட இலங்கைக்கு பெரிய விலையல்ல என்றும் குல்திப்நாயர் எழுதியுள்ளார்

விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனை நாடுகடத்துவது தொடர்பாக அமைச்சர் தொண்டமான் கருத்துத்தெரிவிக்கையில் "கடத்தல்காரன் வீரப்பனையே பிடிக்க முடியாத நீங்கள் பிரபாகரனை நாங்கள் பிடிக்க வேண்டுமென எப்படி எதிர் பார்க்கிறீர்கள்" எனக்கேள்வி யெழுப்பியதாகவும் குல்திப் நாயர் தமது கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

## அடுத்த யாத்திரை கண்டிக்கு

எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில், கொழும்பிலிருந்து கண்டிக்கு பாதயாத்திரை ஒன்றை சிறிலங்கா சுதந்திரக்கட்சி மேற்கொள்ளும் என அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக கண்டியில் நடைபெற்ற கட்சிக் கூட்டமொன்றில் பேசும் போது தெரிவித்தார்

## வீரச்சாவு

நேற்று மணலாறில் நடைபெற்ற கடும் மோதல்களில் வெங்கடேஸ்வரன் (மு. சிவகுரு. வவுனியா) ரோபட் (இ இளந்தீபன், மல்லாவி) செல்வகுமார் (க. சுந்தரலிங்கம். ஒட்டிசுட்டான்) ஆகிய வேங்கைகள் வீரச்சாவு எய்தினர்.

## பொறல்லைக்கு

சபாநாயகர் எம். எச் முகமது இதுவரை அமைப்பாளராக இருந்த பொறல்லை பகுதிக்கு ஐ. தே. க. அமைப்பாளராக ஜயந்தா சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

## குமிழமுனை...

ஆட்டு படையினர் தங்கபுரத்தில் தடுக்கப்பட்டுள்ளனர்.

நேற்றைய மோதல்களில் படையினர் தரப்பில் 7 பேர் பலியானதாகவும் 15 பேர் காயமடைந்ததாகவும் கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

காயப்பட்ட படையினர் அநுராதபுர ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படுவதாக ஏஜன்ஸி செய்திகள் தெரிவித்தன

## இனப்...

கும் எதிர்க்கட்சிகளுக்குமிடையேயான செயற்பாட்டு தடைநிலை நீக்கப்பட்டால் இனப்பிரச்சினைக்கான பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் எதிர்க்கட்சியினர் பங்குகொள்வதில் பிரச்சினை இருக்காது என்பதும் சுட்டிக்காட்டப்படும் எனத் தெரியவருகிறது

## ஜனாதிபதி...

பட்ட ஆயுதம் மறைத்து வைக்க முடியாத கட்டுத்துவக்கு

பொலிஸாருக்கும் இந்த உறுப்பினருக்கும் இடையில் சில விவகாரங்களில் ஏற்கனவே பிணக்கு இருந்திருக்கிறது

இது போன்ற காரணங்களாலேயே குற்றச்சாட்டு தர்க்க ரீதியற்றது எனக் கருதப்படுவதாகத் தெரிகிறது

## சி. ம, கட்சி...

கட்சியிக்சேர்ந்து கொண்டார்

ஐ. தே. க.வுக்கு ஆதரவாக செயற்படுவதாக குற்றஞ்சாட்டியே இந்த பத்துப்பேரும் சிறிலங்கா மக்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் ஐ. தே. க.விலேயே சேர்ந்து அடுத்த மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடக்கூடுமென ஊகிக்கப்படுகிறது.

# சூழல் பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஏற்க அமெரிக்கா மீண்டும் மறுப்பு

உலக சூழல், உயிரின பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட முடியாது என மீண்டும் அமெரிக்க ஜனாதிபதி புஷ் மறுத்துள்ளார்.

ஒப்பந்தத்தை ஏற்கச் செய்ய அவரை பிரிட்டிஷ் பிரதமர் மேஜர் சந்தித்துப் பேசிய பின்னரே புஷ் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

இதேசமயம் பிரிட்டிஷ் பிரதமரும் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான நட்டஈடு விடயத்தை கண்டித்துள்ளார்.

சூழல் ஒப்பந்தத்தை அமெரிக்கா ஏற்க மறுத்த அறிவிப்பு நேற்றைய மாநாட்டில் பலத்த கண்டனத்திற்கு உள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலகச் சூழலில் ஏற்படும் பாதிப்புகளுக்கு அபிவிருத்தியடைந்த கைத்தொழில் நாடுகளே காரணம் என உலக வங்கியின் தலைவர் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டினார்.

பிறேசிலில் நடைபெறும் உலக சூழல் மாநாட்டில் நேற்று உரையாற்றிய அவர், பாதிப்புகள் ஏற்படக்காரணமானவர்களே அதை நிவர்த்தி செய்ய உதவித் தொகைகளை வழங்கவேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

# சீனக்கப்பல்கள் மீன்பிடிக்கத் தடை

மன்னாருக்கு அப்பால் ட்றோலர் மீன்பிடியில் ஈடுபடும் இரண்டு சீனக் கப்பல்கள் தொடர்ந்து அங்கு மீன்பிடிப்பது தடுக்கப்பட்டுள்ளது

மீன்பிடி ஆராய்ச்சி ஒப்பந்தமொன்றின் அடிப்படையில் ஆராய்ச்சி மீன்பிடியில் ஈடுபட்ட இக்கப்பல்கள் ஒப்பந்தத்துக்கு மாறாக அங்கீகரிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அப்பாலும் மீன்பிடியில் ஈடுபட்டது பற்றி உள்ளூர் மீனவர்கள் ஆட்சேபனை எழுப்பினர் இவ்விடயத்தை எதிர்க்கட்சியினர் அரசின் கவனத்திற்கு கொண்டு வந்ததைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆழ்கடல் மீன்பிடிப்பு சம்பந்தமான ஆய்வுக்கெனவே சீனக்கப்பல்கள் பாவிக்கப்பட்டன, ஆனால் அவை மீன் உற்பத்தியை பாதிக்கக்கூடிய வகையில் மீன்பிடியில் ஈடுபட்டதும் ஆட்சேபனைக்கான காரணங்களில்ஒன்றாகவுள்ளது

# மென்மைப்பேச்சு, கடும்தாக்கு ஜனாதிபதியின் அணுகுமுறை

"மென்மையாகப் பேசுவது கடுமையாகத் தாக்குவது" இதுதான் ஜனாதிபதி பிரேமதாஸவின் இனப்பிரச்சினை தொடர்பான அணுகுமுறை என "ஐலண்ட்" பத்திரிகையில் எழுதிய கட்டுரை ஒன்றில் தாரகி குறிப்பிட்டுள்ளார். ஜே. வி. பிக்கு சாத்தியமாக இருந்தாலும் இனப்பிரச்சினைக்கு இது பொருந்தாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இரட்டை இராணுவ அரசியல் கொள்கை பற்றிப் பேசியபோதும் அது நடைமுறை சாத்தியமற்றது

ஐ. தே கவின் நோக்கம் வடக்கு கிழக்கில் தமிழர்களின் ஆதரவைப் பெற முயலும், அதேவேளை தமிழ் தீவிரவாதிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவது தான் என்பது தெளிவாகத் தெரிகிறது.

ஜனாதிபதி வவுனியாவுக்கு விஜயம் செய்தபோது நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையினால் நாடுகடந்த பிரச்சினையைப் பெரிதாக்கி இந்திய இராஜதந்திர மற்றும் அரசியல் ரீதியாக அழுத்தம் பிரயோகிப்பதை அரசு தடுத்துள்ளது இப்பொழுது சிறிலங்கா அரசு ஆயுதங்களைவு" பற்றியும் பேசுகிறது.

மேலும் இந்த இராணுவ நடவடிக்கை அரசு பாதுகாப்புப் படையை ஆதரிக்கிறது என்பதைக்காட்டவும். இந்தியாவின் கடும் போக்கை சாதகமாக உபயோகிப்பதாகத் தெரிகிறது காட்டிக்கொள்ளவும் எடுக்கப்பட்டதாக தாரகி கூறுகிறார்.

இன்றைய சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தமிழ் இனப்பிரச்சினையில் ஒரு முக்கிய அம்சமாக வெளிப்படையாகக் காட்டினால் அது தமது அரசியல் அதிகாரத்துக்கு ஆபத்தாக இருக்குமென அரசு கருதுகிறது.

ஜனாதிபதியின் அணுகுமுறை விடுதலைப்புலிகளின் இராணுவ மற்றும் அரசியல் பலங்களைத் தடுக்க முடியுமா என்பதை இனிமேல் தான் பார்க்கவேண்டும் இவ்வாறு தாரகி தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

## அமைச்சரால் தீர்க்கப்படவில்லை

'சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்ட பிளவு சக்திவாய்ந்த ஐ. தே. க. அமைச்சர் ஒருவரின் தலையீட்டினால் தீர்த்து வைக்கப்பட்டது என்ற செய்தி தவறு எமது உள் பிணக்குகளை தீர்த்துக் கொள்ள எம்மால் முடியும் என்பதில் நாம் பெருமையடைகிறோம் எமது அலுவல்களில் வெளியார் தலையிட நாம் அனுமதிப்பதில்லை"

இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் பத்திரிகையொன்றுக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் எம். பிக்களான புகாரீதீன், ஹிஸ்புல்லா ஆகியோருக்கும் கட்சித்தலைமைக்குமிடையே இருந்த கருத்து வேற்றுமை அவர்கள் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதன் பேரில் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது ஆனால் ஹிஸ்புல்லாவின் இடை நிறுத்தம் அமுலில் உள்ளது

மேலும் சேகு இஸ்ஸதீன் கட்சியிலிருந்து நீக்கப்படவில்லை அவர் இடை நிறுத்தமே செய்யப்பட்டுள்ளார் இவ்வாறு அக் கடிதத்தில் தெரிவிக்கப்படுகிறது.

## ஆகஸ்ட் வரை ஒத்திவைப்பு

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கிய பதவிகளுக்கு ஜூலை இருபத்தைந்தாம் திகதிதேர்தல் நடாத்துவதற்கு கூட்டப்படவிருந்த செயற்குழுக்கூட்டம் ஆகஸ்ட் மாத முதற்பகுதிக்கு ஒத்திப்போடப்படலாம்

இதேவேளை திருமதி பண்டாரநாயகாவை கட்சியின்வழிகாட்டியாகவைத்துக்கொண்டு கட்சித் தலைவர் பதவியொன்றை உருவாக்க வேண்டுமென்ற யோசனை அனுரா பண்டாரநாயகவின் எதிரணியால் முன்னெடுக்கப்படவில்லை

கட்சித் தலைவர் பதவியொன்று மேலதிகமாக உருவாக்கப்பட்டால் கட்சிவழிகாட்டியின் அதிகாரங்கள் தலைவருக்கு மாற்றப்பட வேண்டும் என அனுரா வாதிடுவதாகத் தெரிகிறது

## செயலாளர் பதவிக்கு போட்டி

சுதந்திரக் கட்சியின் செயலாளர் பதவிக்கு தற்போதைய செயலாளர் தர்மசிறி சேனநாயகவும் மகிந்த ராஜபக்ஷவும் போட்டியிடலாம் எனத் தெரிகிறது இவர்களுடன் ஹேல உறுமயவும் ஒரு வேட்பாளரை நிறுத்தலாம் எனவும் தெரிகிறது

இதேநேரம் ஒருமுழு நேர செயலாளரை நியமிப்பது பற்றியும் தீவிரமாகப் பரிசீலிக்கப்படுகிறது அப்படியான சந்தர்ப்பத்தில் சுதந்திர கட்சி சட்டத்தரணி ஒருவர் அப்பதவிக்கு நியமிக்கப்படலாம்.

## எதிர்க்கட்சி கேள்விகள் அரசினால் பதிலளிக்கப்படும்

இன்று பாராளுமன்றம் கூடும் போது எதிர்க்கட்சிகள் எழுப்பும் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதிலளிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது இதற்கான முடிவு அரசாங்கத்தால் எடுக்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது.

இந்த முடிவுக்கமையவே சபாநாயகர் அழைத்த கட்சித் தலைவர் கூட்டத்தில் அரசாங்கத் தரப்பினர் கலந்து கொண்டனர் ஆனால் சென்ற மாதம் இவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதிலளிக்க மறுத்தனர்.

இதேவேளை பாராளுமன்ற உரிமை மீறல் குற்றச் சாட்டுக்கு உள்ளாக்கப்பட்ட ஆறு சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தமாக இறுதி முடிவெதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை.

இதேபோல உடுகம்பொல அறிக்கை மதிவணங்கி தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையும் பிரதமரின் அறிக்கை என்பனவற்றின் மீது விவாதம் நடாத்துவது பற்றியும் முடிவெதுவும் எடுக்கப்படவில்லை.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிறெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில். உள்ள அச்சகத்தில் 09-06-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது